# News Release

# வாகன் சுவை விழாவுக்கான (Vaughan Flavours) உங்கள் மேஜையை முன்பதிவு செய்யுங்கள்!

*ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 4 வரை, வாகனில் உள்ள 20 உள்ளூர் உணவகங்களில், ருசிகரமான மூன்று-வகை உணவுகளைக் அனுபவிக்கத் தயார் ஆகுங்கள்!*

**வாகன், ஒன்டாறியோ (ஜூன் 23, 2025)** – உணவு பிரியர்களே கவனியுங்கள்! இந்தக் கோடையில் வாகனிலேயே உலகம் முழுவதும் உள்ள சுவைமிகு உணவுகளை அனுபவிக்கத் தயாராக இருக்கிறீர்களா?

இன்று, மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள், வாகன் சுவை விழா (Vaughan Flavours) என்ற புதிய உணவுத் திருவிழாவை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளனர். இந்த விழா **ஜூலை 21, திங்கள் கிழமை முதல் ஆகஸ்ட் 4, திங்கள் கிழமை வரை** நடைபெறுகிறது, அதில் 20 உள்ளூர் உணவகங்கள் பங்கேற்கின்றன.

பின்வரும் உணவகங்களில் மதிய உணவிற்கு $20 முதல் $55 வரையிலும், இரவு உணவிற்கு $25 முதல் $75 வரையிலும் மூன்று-வகை ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் (three-course prix fixe) மெனுக்களை அனுபவிக்க இன்றே உங்கள் மேஜையை முன்பதிவு செய்யுங்கள்:

- போட்டிசெல்லி ரிஸ்டோரன்டே – 705 ஆப்பிள்வூட் க்ரெசன்ட், யூனிட் 1 (Botticelli Ristorante – 705 Applewood Cresc., Unit 1)
- காய் காக்-மாங்-ரெ ரெஸ்டோரன்ட் – 4300 ஸ்டீல்ஸ் அவென்யூ வெஸ்ட், யூனிட் 29 (Cai Gac-Mang-Re Restaurant – 4300 Steeles Ave. W., Unit 29)
- காஸ்டெல்லோ ரிஸ்டோரன்டே – 3600 லாங்ஸ்டாஃப் ரோடு, யூனிட் 12 (Castello Ristorante – 3600 Langstaff Rd., Unit 12)
- ட்ரஞ்ச் கிச்சன் அண்ட் வைன் – 9200 பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட், யூனிட் D6 (Drunch Kitchen and Wine – 9200 Bathurst St., Unit D6)
- எடோ ஜப்பான் – 3737 மேஜர் மெக்கென்சி டிரைவ் வெஸ்ட், யூனிட் 103 (EDO Japan – 3737 Major Mackenzie Dr. W, Unit 103)
- எசென்ஸ் பிஸ்ட்ரோ – 140 வுட்பிரிட்ஜ் அவென்யூ, யூனிட் 2 (Essence Bistro – 140 Woodbridge Ave., Unit 2)
- ஃபிளேமிங் கிச்சன் – 3175 ரூதர்ஃபோர்டு ரோடு, யூனிட் 37 (Flaming Kitchen – 3175 Rutherford Rd., Unit 37)

- ஜிரோ டி'இட்டாலியா – 8740 ஜேன் ஸ்ட்ரீட், யூனிட் 16 (Giro d'Italia – 8740 Jane St., Unit 16)
- ஹாட் ஷாட் பார் அண்ட் கிரில் – 2600 ரூதர்ஃபோர்டு ரோடு (Hot Shot Bar and Grill – 2600 Rutherford Rd.)
- ஐஸ்கிரீம் பாட்டியோ – 7611 பைன் வாலி டிரைவ், யூனிட் 34 (Ice Cream Patio – 7611 Pine Valley Dr., Unit 34 )
- கேமென் ராமென் – 3737 மேஜர் மெக்கென்சி டிரைவ் வெஸ்ட், யூனிட் 108 (Kamen Ramen – 3737 Major Mackenzie Dr. W, Unit 108)
- கெய்ஃபி-இ இஸ்தான்புல் துருக்கி உணவகம் – 1200 ஹைவே 7, யூனிட் 1 (Keyfi-i Istanbul Turkish Cuisine – 1200 Hwy 7, Unit 1)
- க்ரேவ் இந்தியன் – 6150 ஹைவே 7, யூனிட் 4 (KRAVE INDIAN – 6150 Hwy 7, Unit 4)
- லாகோ ரெஸ்டாரண்ட் – 10000 டஃபெரின் ஸ்ட்ரீட் (lago Restaurant – 10000 Dufferin St.)
- மாஸ்ட்ரோ ரோபர்டோ ட்ரட்டோரியா – 7887 வெஸ்டன் ரோடு, யூனிட் 8 (Mastro Roberto Trattoria – 7887 Weston Rd., Unit 8)
- ஒஸ்டெரியா ஜென்டே – 28 ராய்டெக் ரோடு, யூனிட் 3 (Osteria Gente – 28 Roytec Rd., Unit 3)
- தி சால்டி டாக் – 9732 ஹைவே 27 (The Salty Dawg – 9732 Hwy 27)
- தாட்’ஸ் இட்டாலியன் – 2 டால் கிராஸ் ட்ரெயில், யூனிட் 5 (That's Italian – 2 Tall Grass Trail, Unit 5)
- ட்ரியோ ரெஸ்டாரண்ட் அண்ட் பார் – பாஸ் ப்ரோ மில்ஸ் டிரைவ், யூனிட் 200 (Trio Restaurant and Bar – Bass Pro Mills Dr., Unit 200)
- வெஸ்ட்எண்ட் கிரில் ஹவுஸ் – 4040 ஸ்டீல்ஸ் அவென்யூ, யூனிட் 1 (Westend Grill House- 4040 Steeles Ave., Unit 1)

இந்தப் புதிய உணவுக் கொண்டாட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது காத்திருக்கிறது – தவறவிடாதீர்கள், இப்போதே திட்டமிடுங்கள்!

வாகன் சுவை விழா (Vaughan Flavours) என்பது, அமெரிக்காவில் விதிக்கப்பட்ட பரந்த அளவிலான வரிகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையாக, உள்ளூர் வணிகங்களை ஆதரிக்க உருவாக்கப்பட்ட நகரத்தின் சமீபத்திய முயற்சி ஆகும். இது மேயர் டெல் டுகாவும், வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவும் முன்வைத்த உறுப்பினர் தீர்மானத்தின் அடிப்படையில் உருவானது. அந்தத் தீர்மானம், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முயற்சி திட்டத்தை உருவாக்க நகர ஊழியர்களை வழிநடத்துகிறது. ஏப்ரல் 23 அன்று, வாகன் கவுன்சில், வாகன் சுவை விழாவுக்கான (Vaughan Flavours) முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஊழியர் அறிக்கையை அங்கீகரித்தது.

மெனுக்களைப் பார்வையிடவும், மேஜையை முன்பதிவு செய்யவும், பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்லவும்:
[visitvaughan.ca/**VaughanFlavours**](visitvaughan.ca/VaughanFlavours)

**மேற்கோள்கள்**

“வாகன் நகரம், உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு வகையான உணவுகளை வழங்கும் சுவையான உணவகங்களுக்குப் புகழ்பெற்றது. எனவே, நீங்கள் ஒரு உணவுப் பிரியராக இருந்தால், தொடங்கவிருக்கும் வாகன் சுவை விழா (Vaughan Flavours) – உணவுத் திருவிழாவைத் தவறவிட விரும்ப மாட்டீர்கள்! இந்தக் கோடையில் 20 சிறந்த உணவகங்கள் பங்கேற்கின்றன என்பதை அறிவிப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்தத் திட்டம், புதிய உணவு வகைகளை அறிமுகப்படுத்துவதற்கும், நீங்கள் விரும்பும் பழைய சுவைகளை மீண்டும் அனுபவிப்பதற்கும் வாய்ப்பை வழங்குகிறது, அதே நேரத்தில் உள்ளூர் உணவகங்களை ஆதரிக்கவும் உதவுகிறது. இது அனைவருக்கும் பயனளிக்கும் ஒரு முயற்சி! ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 4 வரை, குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் ஒரு இனிய இரவை அனுபவிக்க அனைவரும் முன்பதிவு செய்வார்கள் என நம்புகிறேன். இந்த முயற்சியை நடைமுறைப்படுத்த சிறப்பான பணியைச் செய்த வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டாவுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோடையில் வாகனின் சுவைகளை அனைவரும் அனுபவிப்பதை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!”

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

“வாகனில் உள்ள நமது அற்புதமான உணவகங்கள் பல, முதல் முறையாக நடைபெறும் வாகன் சுவை விழா (Vaughan Flavours) திட்டத்தில் பங்கேற்பதை காண நேர்ந்ததில் எனக்கு மகிழ்ச்சி. நம்ம ஊர்லேயே சுவையான உணவுகளை ருசிக்கவும், அதேசமயம் உள்ளூர் வணிகங்களை நேசித்து ஆதரிக்கவும் வாகனுக்கு இது ஒரு அற்புதமான வாய்ப்பு. உள்ளூர் உணவகங்களின் முக்கியப் பங்களிப்பையும், அவை வாகனில் தொடர்ந்து ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தையும் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாட சமூகத்தை ஒன்றிணைப்பதை நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். இந்த அருமையான திட்டம் நடைமுறைக்கு வர, தனது வழிகாட்டலையும் உறுதியான ஆதரவையும் வழங்கிய மேயர் ஸ்டீவன் டெல் டுகா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

- வார்டு 2 கவுன்சிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா

**முக்கியத் தகவல்கள்**

# News Release

- வாகன் நகரம் இந்தக் கோடையில் வாகன் சுவை (Vaughan Flavours) விழாவை நடத்தவுள்ளது. இது ஜூலை 21 திங்கள் முதல் ஆகஸ்ட் 4 திங்கள் வரை இரண்டு வாரங்கள் நடைபெறும்.
- 20 உணவகங்கள் இந்த வாகன் சுவை (Vaughan Flavours) நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளன.
- பங்கேற்கும் உணவகங்கள், நேரில் உட்கார்ந்து உணவருந்தும் அனுபவத்துடன், மதிய உணவுக்கு $20 முதல் $55 வரை மற்றும் இரவு உணவுக்கு $25 முதல் $75 வரை நிர்ணயிக்கப்பட்ட விலையுடன் மூன்று-வகை ப்ரீக்ஸ் ஃபிக்ஸ் (three-course prix fixe) மெனுக்களை வழங்கவுள்ளன.
- முன்பதிவைச் செய்ய, visitvaughan.ca/**VaughanFlavours** -ஐ பார்வையிடவும் அல்லது நேரடியாக அந்த உணவகத்தின் வலைத்தளத்தை அணுகவும்.
- மார்ச் 25 அன்று, வாகன் கவுன்சில், மேயர் டெல் டுகா மற்றும் வார்டு 2 கவுன்சிலர் வோல்பெண்டெஸ்டா ஆகியோரின் உறுப்பினர் தீர்மானத்தை அங்கீகரித்தது. அதன்படி வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உள்ளூர் உணவகங்களில் உணவருந்த ஊக்குவிக்கும் ஒரு முயற்சி திட்டத்தை உருவாக்க ஊழியர்களை வழிநடத்த வேண்டும்.
- ஏப்ரல் 23 அன்று, வாகன் கவுன்சில், வாகனில் வசிப்பவர்களும் பார்வையாளர்களும் உணவருந்த ஊக்குவிக்கும் விதமாக ஒரு முயற்சி திட்டத்தை நடைமுறைப்படுத்த ஊழியர்களின் அறிக்கையை அங்கீகரித்தது.
- 2025 மார்ச் மாத தொடக்கத்தில், அமெரிக்கச் சப்ளையர்களைத் தடை செய்யும் கொள்கையை அங்கீகரித்த ஒன்டாறியோ மாகாணத்தின் முதல் நகராட்சியாக வாகன் திகழ்ந்தது. ஏப்ரல் மாதத்தில், வாகன் நகரம், வணிகங்களுக்கு 'வாகன் உறுதியானது – கனடியர்களை ஆதரிக்கவும்' எனும் இலவச வரவேற்புத் தொகுப்புகளை வழங்கத் தொடங்கியது. இவை, கடைகளில் உள்ள உள்ளூர் மற்றும் கனடாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களை அடையாளம் காண உதவும் பொருட்களைக் கொண்டுள்ளன. இது கட்டணம் செலுத்தும் கவுண்டரில் வாடிக்கையாளர்கள் சந்திக்கும் குழப்பத்தை நீக்குகிறது. உங்கள் வணிகத்திற்கான வரவேற்புத் தொகுப்பைக் கோர, ed@vaughan.ca என்ற முகவரியில் பொருளாதார மேம்பாட்டுக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

**மேலும் அறிய**

- visitvaughan.ca/**VaughanFlavours**
- மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் வார்டு 2 கவுன்ஸிலர் அட்ரியானோ வோல்பெண்டெஸ்டா ஆகியோரின் உறுப்பினர் தீர்மானம் – மார்ச் 18, 2025: வாகன் உணவகத் திருவிழா

- ஊழியர் அறிக்கை – ஏப்ரல் 8, 2025: வாகன் உணவகத் திருவிழா – கோடை 2025 | குளிர்காலம் 2026
- vaughanbusiness.ca/**VaughanStrong**
- வாகன் சுற்றுலா வலைத்தளம்
- வாகன் சுற்றுலா மின்-செய்திமடல்
- பொருளாதார மேம்பாட்டுத் துறை மின்-செய்திமடல்
- பொருளாதார மேம்பாடு LinkedIn

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca